DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: STC 452/2026**

Prosecution witness **PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Raveen Kumar | Caste | : | |
| Father Name | : | Patturaja | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 31 |
| Time | : | | | | |

**(A1, A2 present. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **10.07.2026**

**10.07.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது குன்னூர் நகர கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 29.03.2026 ம் தேதியில் மாலை 05.30 மணியளவில் நானும் எனது கிராம உதவியாளர் அப்துல் மஜித் என்பவரும் கள ஆய்வு சம்பந்தமாக இருசக்கர வாகனத்தில் குன்னூர் பேருந்து நிலையம் அருகே சென்றுகொண்டிருந்த போது லெவஸ் கிராஸ் அருகில் திராவிட முன்னேற்ற கழக கட்சியை சேர்ந்த பிரேம்குமார் என்பவர் மற்றும் அவருடன் இருந்த 150 நபர்கள் அவர்கள் MLA வேட்பாளரை வரவேற்பதற்காக திரண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் செந்தில்நாதன் என்பவர் வெடி வெடித்து கொண்டாடினார்.

2. தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் போது அவர்கள் வெடி வெடித்தது ஒரு குற்றம் ஆகும். ஆஜர் எதிரிகள் தான் அந்த நபர்கள் ஆவார்கள். பின்னர் எங்கள் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வந்துவிட்டு அன்று மாலை 07.00 மணிக்கு காவல் நிலையம் சென்று மேற்படி சம்பவம் குறித்து புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான் (**அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வழக்கு சம்பந்தமாக உவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. அ.சா.ஆ.1 புகாரை நான் கிராம நிர்வாக அலுவலர் என்ற முறையில் கொடுத்தேனா அல்லது தேர்தல் பணி மேற்கொண்டேன் என்ற முறையில் கொடுத்தேனா என்றால் கிராம நிர்வாக அலுவலர் என்ற முறையில் கொடுத்தேன். தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்ததிலிருந்து தேர்தல் முடியும் வரை தேர்தல் ஆணையத்தின் கீழ் தான் நான் பணிபுரிய வேண்டும் என்றும், அவர்கள் தான் எனக்கு சம்பளம் கொடுப்பார்கள் என்றும் சொன்னால் சரிதான். தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிந்த பிறகு நாங்கள் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியே வந்துவிடுவோம் என்றால் சரிதான்.

2. தற்போது தமிழ்நாடு அரசு ஊழியர் என்ற முறையில் சாட்சியம் சொல்கிறேன். இந்த வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு நான் தேர்தல் ஆணையத்திடமிருந்து எவ்வித அனுமதியும் பெறவில்லை என்றால் சரிதான். லெவல் கிராஸ் என்ற பகுதி அதிக ஜனநடமாட்டம் மற்றும் கடைகள் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் எனது புகாரில் எந்தெந்த நபர்கள் சாட்சியாக இருந்தார்கள் என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அந்த பகுதியில் எப்போதும் போலிஸ் பாதுகாப்பு இருக்கும் என்றால் சரிதான். பட்டாசு வெடித்ததாக சொல்லப்படும் சமயத்தில் காவலர்கள் யாரும் பட்டாசு வெடிப்பதை தடுக்கவில்லை என்றால் அவர்கள் கூறினார்கள், ஆனால் எதிரிகள் கேட்கவில்லை.

3. எனது புகாரில் இந்த நபர் தான் பட்டாசு வெடித்தார் என நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எனது புகாரில் ஏற்பாடு செய்த பிரேம்குமார் மற்றும் செந்தில்நாதன் என்று தான் கூறியுள்ளேன் என்றும், அவர்கள் தான் பட்டாசு வெடித்தார்கள் என்று கூறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பட்டாசு வெடித்த இடத்திலிருந்து எந்தவொரு எஞ்சிய பட்டாசு துகள்களை கைப்பற்றி அதை காவல் நிலையத்தில்

ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். சுமார் அந்த இடத்தில் எத்தனை நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் 200 லிருந்து 300 நபர்கள் இருந்திருப்பார்கள்.

4. பட்டாசு வெடித்ததால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டதாகவோ கடை வைத்திருப்பவர்களுக்கு தொந்தரவு ஏற்பட்டதாகவோ யாரும் என்னிடம் தனிப்பட்ட முறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரை நானே தான் கொடுத்தேன். அன்றைய தினம் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் போது எனது மேலதிகாரி சார் ஆட்சியர் என்றால் சரிதான். எந்தவிதமான தேர்தல் நடத்தை விதிமுறைகள் மீறும் போது சார் ஆட்சியரிடம் தான் புகார் அளிப்போம் என்றால் சரிதான். அவ்வாறு அவரிடம் ஏதாவது புகார் கொடுத்தேனா என்றால் நேரில் சென்று வாய்மொழியாக இந்த சம்பவத்தை கூறினோம்.

5. அதன் பின்னிட்டு அவரது அறிவுறுத்தலின் பேரில் தான் அ.சா.ஆ.1 புகார் கொடுத்தேன். தேர்தல் நடத்தை விதிமுறைகள் அந்த சமயத்தில் அமலில் இருந்தது என்பதை காண்பிக்க எவ்வித உத்தரவு நகலையும் நான் புகாருடன் சேர்த்து சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கு இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், புள்ளவிவர கணக்கிற்காக எனது மேலதிகாரியின் உத்தரவின் பேரில் ஒரு பொய்யான புகாரை நான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.